Registered as a Newspaper   பக்கங்கள் 04   விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM   மக்கள் தினசரி   Peoples Daily

நாதம் 04   திருவள்ளுவர் ஆண்டு 2024   புரட்டாதி 06   (22-09-1993)   புதன்கிழமை   ஓசை 216

## யாழ். நகர தேநீர்க் கடைகள் மூன்றை மூடிவிட உத்தரவு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள மூன்று தேநீர்க் கடைகளை உடனடியாகப் பூட்டும்படி யாழ். சுகாதார வைத்திய அதிகாரி நேற்றுப் பணித்துள்ளார். இக் கடைகளில் சுகாதார நிலைமை மிக மோசமாக இருப்பதாலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. மேலும் ஆறு கடைகளில் சுகாதார விதிகளுக்கமைய திருத்த வேலைகளை உடன் மேற்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. மூடப்பட்ட கடைகள்சிலவற்றில் உணவுப் பொருள்கள் திறந்தவெளியில் சமைக்கப் படுவதாக சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக வட்டாரத்தினர் தெரிவிக்கின்றனர். இக் கடைகளில் குடிநீர் சுத்தமான முறையில் கொள்கலன்களில் வைக்கப்படவில்லை என்றும், கழிவு நீர் தேங்கி நிற்பதாகவும் தெரிவிக்கப்படு (4ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கில் தாக்குதல்களை நடத்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுவிட்டது

## தியாகி திலீபன் நினைவாக குடாநாடு எங்கும் எழுச்சி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு எழுச்சி யூட்டும் வகையிலும் தமிழ்த் தேசிய இனத்தை அடக்கு முறைக்குட்படுத்திய சிறிலங்கா அரசிற்கெதிராகவும் இந்திய வல்லாதிக்க சக்திகளுக்கெதிராகவும் அகிம்சை வழிப் போராட்டத்தை நடாத்தி தன்னுயிரைத் தியாகம் செய்த தியாகி திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவு நாட்கள் யாழ். குடாநாடெங்கும் மிகவும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன.

யாழ். குடாநாட்டின் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, யாழ். நகரம் ஆகிய அனைத்துப் பகுதிகளிலும் தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக எழுச்சிக் கோலம் பூண்டுள்ளது.

அனைத்துப் பிரதான வீதிகள், மற்றும் பொதுஇடங்கள் தோறும் சிவப்பு, மஞ்சள் வர்ணக் கொடிகளும் தோரணங்களும் கட்டப்பட்டுள்ளது. அத்துடன் தியாகி திலீபனை நினைவுகூரும் வகையிலும், தமிழீழ தேசியத்தையும், தாயக விடுதலையின் அவசியத்தையும் உணர்த்தி நிற்கும் எழுச்சிக் கோசங்களைத் தாங்கிய பதாகைகள் பிரதான வீதிகளின் குறுக்காக கட்டப்பட்டுள்ளன. இவற்றைவிட குடாநாடு பூராகவும் பல்லாயிரக்கணக்கான விசேட நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த நினைவுப் பந்தல்களில் தியாகி திலீபனின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு தினமும் அஞ்சலி செலுத்துவதில் மக்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருவதாக குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலுமுள்ள எமது பிராந்திய செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர்.

### தியாகி திலீபன் நினைவு உண்ணாவிரதம், சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

தியாகிலெப்டினன்ட்கேணல் திலீபன் நினைவாக அனுஷ்டிக்கப்படும் அடையாள உண்ணாவிரதங்கள் நாளை பின்வரும் இடங்களில் மேற்கொள்ளப்படவுள்ளன.

சங்கானை வட்டம், சங்கானை அரசடி வைரவர் கோவில் முன்றல், சுழிபுரம் சிற்றூர் மக்கள்; கோப்பாய் கோவில் முன்றல், சுன்னாகம் முகாம் மக்கள்; யாழ்ப்பாணம் வட்டம், நல்லூர் கந்தசுவாமி கோவில்வீதி, பொம்மைவெளி மக்கள்; நல்லூர் வட்டம், நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதி, அரியாலை / கந்தர் மடம் மக்கள்; கரவெட்டி வட்டம், நெல்லியடி கிழக்கு சாமியன்அரசடி, கரணவாய் வடக்கு கிழக்கு மக்கள்; உடுப் [...]

பாஷையூர் மக்கள் முன்னேற்ற புனித அந்தோனியார் சனசமூக நிலைய முன்றலிலும், கொழும்புத்துறை மணிப்புரி [...]

## பாராளுமன்ற கட்சிக்குழு கூட்டத்தில் டி. பி. விஜேதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் மேற்கொள்ளப்படவேண்டிய இராணுவ நடவடிக்கைகள் குறித்து படையினருக்கு வேண்டிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன எனவும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள இராணுவம் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் சிறிலங்கா ஜனாதிபதி டிங்கிரிபண்டா விஜேதுங்க ஐக்கியதேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் பேசும்போது தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் பாராளுமன்றக் கட்சிக்குழுக் கூட்டம் நடைபெற்றபோது கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் உரைகளுக்குப் பதிலளித்துப் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னதாக சிறிலங்காவில் இனப்பிரச்சினை என ஒன்று இல்லை. இருப்பது பயங்கரவாதப் பிரச்சினையே என்ற சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவின் நிலைப்பாட்டைத் தாம் ஆதரிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் கூட்டுப்படைத் தலைமை அலுவலக கலைப்பு, மற்றும் பாதுகாப்பு கட்டமைப்பில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் அனைத்தையும் தாம் ஆதரிப்பதாகவும் டி. பி. விஜேதுங்கவின் நடவடிக்கைகளை தாம் முழுமையாக ஆதரிப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் இப்பிரச்சினை தொடர்பாக பேச்சுவார்த்தைகள் எதனையும் மேற்கொள்ளக்கூடாது எனவும் மிகவிரைவில் வடக்கு கிழக்கு பகுதிகளில் இருந்து "பயங்கரவாதத்தை" ஒழித்துக்கட்டுமாறு பாதுகாப்பு படையினரிடம் தாம் வேண்டுகோள் விடுப்பதாகவும் பாராளுமன்ற கட்சி (4ஆம் பக்கம் பார்க்க)

### விஜேதுங்காவை பாராட்டி 'ஹெல உறுமய' கூட்டம்

வடக்குக் கிழக்கு இணைப்பைத் தான் எதிர்ப்பதாகவும் [...]

இக் கூட்டத்தில் உரையாற்றிய காமினி ஜெயசூரிய, "சிங் [...]

### வீரச்சாவு



கப்டன் கிருபன் (பிரசாத்)

யாழ். மாவட்டத்தில் நேற்றுக் காலை நடந்த விபத்து ஒன்றில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த கப்டன் கிருபன் / பிரசாத் (டேவிற் மார்க் வின்சிலோ மார்க்- வங்காலை மன்னார்) இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

### எறிகணை வீச்சு

(தொல்புரம்)

காரைநகர் வலந்தலைப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப்படையினர் நேற்று முன்தினம் இரவு 9 45 மணியளவில் மூளாய், பொன்னாலை பகுதிகளை நோக்கி எறிகணை வீச்சினை மேற் (4ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. தென்பகுதியில் அதிரடிப்படை கடமையில்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் தென் பகுதியில் விசேட அதிரடிப்படையினர் இராணுவத்தினருக்கு பதிலாகத் [...] ஏற்கவே விசேட அதிரடிப் படையினர் மட்டக்களப்பின் தென் பகுதிகளில் நிலைகொள்ளச் செய்யப்படுவதாக இராணுவ அதிகாரிகள் தெரி [...]

முறைக்குட்படுத்திய சிறிலங்கா அரசிற்கெதிராகவும் இந்திய வல்லாதிக்க சக்திகளுக்கெதிராகவும் அகிம்சை வழிப் போராட்டத்தை நடாத்தி தன்னுயிரைத் தியாகம் செய்த தியாகி திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவு நாட்கள்

மராட்சி, யாழ். நகரம் ஆகிய அனைத்துப் பகுதிகளிலும் தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக எழுச்சிக் கோலம் பூண்டுள்ளது.

அனைத்துப் பிரதான வீதிகள், மற்றும் பொதுஇடங்கள் தோறும் சிவப்பு, மஞ்சள்

தாயக விடுதலையின் அவசியத்தையும் உணர்த்தி நிற்கும் எழுச்சிக் கோசங்களைத் தாங்கிய பதாகைகள் பிரதான வீதிகளின் குறுக்காக கட்டப்பட்டுள்ளன. இவற்றைவிட குடாநாடு பூராகவும் பல ஆயிரக்கணக்கான விசேட நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த நினைவுப் பந்தல்களில் தியாகி திலீபனின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு தினமும் அஞ்சலி செலுத்துவதில் மக்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருவதாக குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலுமுள்ள எமது பிராந்திய செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர்.

பாஷையூர் மக்கள் முன்னேற்ற புனித அந்தோனியார் சனசமூக நிலைய முன்றலிலும், கொழும்புத்துறை மணிப்புரி கலைமகள் சனசமூக நிலையத்தின் முன்றலிலும் அடையாள உண்ணாவிரதப் போராட்டங்கள் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் குருநகர் மவுண்கார்மேல் மண்டபத்தில் நேற்று

[4ஆம் பக்கம் பார்க்க]

ஜனாதிபதி டிங்கிரிபண்டா விஜேதுங்க ஐக்கியதேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் பேசும்போது தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் பாராளுமன்றக் கட்சிக்குழுக் கூட்டம் நடைபெற்றபோது கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் உரைகளுக்குப் பதிலளித்துப் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னதாக சிறிலங்காவில் இனப்பிரச்சினை என ஒன்று இல்லை. இருப்பது பயங்கரவாதப் பிரச்சினையே என்ற சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவின் நிலைப்பாட்டைத் தாம் ஆதரிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் கூட்டுப்படைத் தலைமை அலுவலக கலைப்பு, மற்றும் பாதுகாப்பு கட்டமைப்பில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் அனைத்தையும் தாம் ஆதரிப்பதாகவும் டி. பி. விஜேதுங்கவின் நடவடிக்கைகளை தாம் முழுமையாக ஆதரிப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் இப்பிரச்சினை தொடர்பாக பேச்சுவார்த்தைகள் எதனையும் மேற்கொள்ளக்கூடாது எனவும் மிகவிரைவில் வடக்கு கிழக்கு பகுதிகளில் இருந்து "பயங்கரவாதத்தை" ஒழித்துக்கட்டுமாறு பாதுகாப்பு படையினரிடம் தாம் வேண்டுகோள் விடுப்பதாகவும் பாராளுமன்ற கட்சி

[4ஆம் பக்கம் பார்க்க]

வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## எறிகணை வீச்சு

(தொல்புரம்)

காரைநகர் வலந்தலைப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப்படையினர் நேற்று முன்தினம் இரவு 9 45 மணியளவில் மூளாய், பொன்னாலை பகுதிகளை நோக்கி எறிகணை வீச்சினை மேற்

[4ஆம் பக்கம் பார்க்க]

## தியாகி திலீபன் நினைவு உண்ணாவிரதம், சிரமதானம்

[யாழ்ப்பாணம்]

தியாகிலெப்டினன்ட்கேணல் திலீபன் நினைவாக அனுஷ்டிக்கப்படும் அடையாள உண்ணாவிரதங்கள் நாளை பின்வரும் இடங்களில் மேற்கொள்ளப்படவுள்ளன.

சங்கானை வட்டம், சங்கானை அரசடி வைரவர் கோவில் முன்றல், சுழிபுரம் சிற்றூர் மக்கள்; கோப்பாய் வட்டம், நீர்வேலி வாய்க்காற்தரவைப் பிள்ளையார்கோவில் முன்றல், புத்தூர், ஆவரங்கால் ச. ச. நிலையம்; சண்டிலிப்பாய் வட்டம், ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் கோவில் முன்றல், மானிப்பாய் ப. நோ. கூ. ச. அங்கத்தவர்கள்; உடுவில்/தெல்லிப்பழை வட்டம், சுன்னாகம் சிவன் கோவில் முன்றல், சுன்னாகம் முகாம் மக்கள்; யாழ்ப்பாணம் வட்டம், நல்லூர் கந்தசுவாமி கோவில்வீதி, பொம்மைவெளி மக்கள்; நல்லூர் வட்டம், நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதி, அரியாலை/கந்தர்மடம் மக்கள்; கரவெட்டி வட்டம், நெல்லியடி கிழக்கு சாமியன்அரசடி, கரணவாய் வடக்கு கிழக்கு மக்கள்; உடுப்பிட்டி வட்டம், உடுப்பிட்டி மதிவைரவர் கோவிலடி, உடுப்பிட்டி வர்த்தகர் சங்கம்; பருத்தித்துறை வட்டம் அல்வாய் முத்துமாரி அம்மன் கோவிலடி, ப. நோ. கூ. சங்க உறுப்பினர்கள் பொதுமக்கள்; பளை வட்டம், பளை பிரதேச சபை முன், உ. ஆ. அதிபர்

[4ஆம் பக்கம் பார்க்க]

## விஜேதுங்காவை பாராட்டி 'ஹெல உறுமய' கூட்டம்

வடக்குக் கிழக்கு இணைப்பைத் தான் எதிர்ப்பதாகவும் இப்பொழுது இங்கு காணப்படுவது இனப்பிரச்சினை அல்ல 'பயங்கரவாதப்' பிரச்சினையே என்றும் சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க கூறியிருப்பதைப் பாராட்டும் வகையில் 'ஹெல உறுமய' இயக்கம் கூட்டமொன்றை நடாத்தியுள்ளது.

இக் கூட்டத்தில் உரையாற்றிய காமினி ஜெயசூரிய, "சிங்கள மக்கள் சகல விதத்திலும் உங்களுக்கு ஒத்துழைப்பு நல்குவர், சிங்கள பௌத்த நாடாக இதனை வைத்திருக்க நீங்கள் எடுக்கும் சகல நடவடிக்கைகளுக்கும் உதவி புரிய சிங்கள மகா சபையும் பின்னிற்காது" என கூறியுள்ளார்.

## மட்டு. தென்பகுதியில் அதிரடிப்படை கடமையில்

[கொழும்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தின் தென் பகுதியில் விசேட அதிரடிப்படையினர் இராணுவத்தினருக்கு பதிலாக தற்போது நிலைகொண்டுள்ளதாக ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இதன் மூலம் இப்பகுதியில் இதுவரை நிலைகொண்டுள்ள சில இராணுவ பட்டாலியன்களை வடக்கிற்கு நகர்த்த உயர் அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர். வடக்கில் இராணுவத்தினரின் தொகையை அதிகரிப்பதற்காகவே விசேட அதிரடிப் படையினர் மட்டக்களப்பின் தென் பகுதிகளில் நிலைகொள்ளச் செய்யப்படுவதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

பெரியளவிலான விசேட அதிரடிப் படை பிரிவு ஒன்று செட்டிப்பாளையம், புதுக்குடியிருப்பு, களுதாவெளி, கிரான்குளம், அரன்பத்தை, மண்முனை ஆகிய பகுதிகளுக்கு இம் மாதத்தில் நகர்த்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்

[4ஆம் பக்கம் பார்க்க]

# கடற்படை உயர் அமைப்பில் புதியவர்கள் நியமனம்

(கொழும்பு)

சிறிலங்கா கடற்படை உயர் கட்டளை அமைப்பில் முக்கிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இக் கட்டமைப்பு மாற்றம் கடந்த வாரத்தில் இடம்பெற்றது. நான்கு கடற்படை கப்டன்கள் கொமடோர்களாக பதவி உயர்த்தப்பட்டு அவர்களுக்கு புதிய பதவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

முன்னாள் இயக்குனர் கப்டன் ஜே ரி. ஜி. சுந்தரம் கொமடோராக பதவி உயர்த்தப்பட்டு வடபகுதி கடற்படைக்கு கமாண்டராக நியமிக்கப்பட்டுள்ளார். முன்னாள் வடபகுதி கடற்படை கமாண்டர் கப்டன் டி. டபிள்யூ. கே. சந்தசிறி கொமடோராக பதவி உயர்த்தப்பட்டு கிழக்கு பகுதி கடற்படை கமாண்டராக நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை கிழக்குப்பகுதி கடற்படை கமாண்டராக இருந்த கப்டன் டி. கே. தசநாயக்கா கொமடோர் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டு அதிகாரிகள் தலைவராக பதவி ஏற்றுள்ளார்.

இதுவரை அதிகாரிகள் தலைவராக இருந்த கொமடோர் சிசில் திஸார அடுத்த ஒன்பது மாதங்களுக்கு கடற்படை பயிற்சியின் பொருட்டு இந்தியாவிலுள்ள தேசிய பாதுகாப்பு கல்லூரிக்கு செல்கிறார்.

கடற்படை நடவடிக்கைகளுக்கான புதிய இயக்குனராக கொமடோராக பதவி உயர்வுபெற்ற எச். ஆர். அமரவீர நியமிக்கப்பட்டுள்ளார்.

## 'நரோமா' கப்பல் பயணிகள் செல்லவில்லை

'நரோமா' கப்பல் மூலம் பயணம் செய்யும் சேவை நேற்று தடைப்பட்டது. காலை திருகோணமலையிலிருந்து பயணிகளுடன் நரோமாகப்பல் காங்கேசன் துறையை வந்து சேர்ந்தது. எனினும் இக் கப்பலில் இங்கிருந்து பயணிகள் செல்வதில் தடங்கல் ஏற்பட்டது. பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்த பயணிகள் திரும்பிச் செல்ல நேர்ந்தது.

நேற்று முன்தினம் தீவகத்திற்கு பயணிகளை ஏற்றிச் செல்வதில் ஏற்பட்ட தகராறினாலேயே நேற்று இப்பயணம் தடைப்படக் காரணம் எனத் தெரிய வருகிறது. [யோ]

## கொழும்பு செல்லவிருக்கும் நோயாளர் கவனத்திற்கு

கொழும்பு வைத்திய சிகிச்சைக்காக தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களும், அவர்களுடன் கூடச்செல்பவர்களும் தங்களுக்கு (2) இரண்டு நாட்களுக்கு தேவையான உணவு, தண்ணீருடன் யாழ். அரசினர் பொது வைத்தியசாலையில் எதிர்வரும் 26ஆம் திகதிஞாயிற்றுக்கிழமை காலை 7 30மணிக்கு தவறாது சமுகமளிக்குமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார்.

## வாந்திபேதி நோயினால் மேலும் அறுவர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

வாந்திபேதி நோய்க்கு இலக்காகி ஒரே குடும்பத்தை சேர்ந்த இரு சிறுவர்கள் உட்பட 6 பேர் நேற்று யாழ். மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நோயாளிகளில் இருவர் சாவகச்சேரி மருத்துவ மனையில் இருந்து நேற்று யாழ். போதனா மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டுள்ளவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(சி), (86)

## தென்மராட்சிப் பகுதியில் புக்காரா கலிபர் தாக்குதல்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் சிறிலங்காவின் விமானப்படை விமானங்கள் இரவு வேளையில் நடாத்திய கலிபர் தாக்குதல்களினால் படகுகளும் வீடுகளும் சேதமடைந்தன.

நேற்று முன்தினம் இரவு 8. 45 மணியளவில் பளை, எழுதுமட்டுவாள், கிளாலி, அல்லிப்பளை பகுதிகளை நோட்டமிட்ட இரு புக்காரா விமானங்கள் அல்லிப்பளை, கிளாலி இறங்கு துறைப் பகுதிகளில் நின்ற படகுகள் மீது கலிபர் தாக்குதல்களை நடாத்தின. இதனால் சில படகுகள் சேதமடைந்தன. இதன் அண்மையில் இருந்த சில வீடுகளும் சிறிது சேதத்திற்குள்ளாகின.

இதனைத் தொடர்ந்து நேற்று அதிகாலை 3. 30 மணியளவில் சிறிலங்கா கடற்படையின் பீரங்கிப் படகொன்று கிளாலி, அல்லிப்பளை கரையோரப்பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதலை நடாத்தியது. (86)

## முல்லையில் காயமடைந்த இருவர் நேற்று மரணம்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவில் கடந்தசனிக்கிழமை விமானப் படையினர் மேற்கொண்ட குண்டுத்தாக்குதலில் காயமடைந்து யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மேலும் இருவர் நேற்று மரணமானார்கள். இவர்களுடன் சேர்த்து இறந்தவர்களின் தொகை 15 ஆக அதிகரித்துள்ளது.

குழுமியிருந்த மக்கள் கூட்டத்தின்மீது சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான போர்விமானங்கள் சனியன்று நடாத்திய கண்மூடித்தனமான றொக்கற் மற்றும்குண்டுத் தாக்குதலுக்கு 13பொதுமக்கள் அந்த இடத்திலேயே உடல் சிதறிப் பலியானதும், 41பேருக்கு மேல் காயமடைந்ததும் தெரிந்ததே. காயமடைந்தவர்களில் யாழ். போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அந்தோனிப்பிள்ளை சகாயநாயகி (வயது 18) பெரியசாமி இராமசாமி (வயது 60) ஆகிய இருவருமே நேற்று மரணமடைந்தவர்களாவர். இவர்களில் சகாயநாயகி என்பவருக்கு கால் ஒன்று துண்டிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

(சி)

# முகாம்களின் நிலை குறித்து வார அறிக்கைக்கு உத்தரவு

[கொழும்பு]

வடக்கு கிழக்கிலுள்ள இராணுவ முகாம்களின் நிலை தொடர்பாக வாராந்தம் தலைமை அலுவலகத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்என இராணுவத்தலைமைப் பீடம் அறிவுறுத்தியுள்ளது. இதற்காக ஒவ்வொரு முகாமிற்கும் விசேடகுழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் இக்குழுவில் சகலதரத்திலான இராணுவத்தினரும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கூட்டுப்படை தலைமைஅலுவலகம் கலைக்கப்பட்டதன் பின்னர் எடுக்கப்பட்ட முகாம்களின்பாதுகாப்புதொடர்பான முதல் நடவடிக்கை இது எனக் கூறப்படுகிறது. இராணுவத் தளபதிகள் வடக்கு கிழக்கு முகாம்களிற்கு நேரடியாகச் சென்று பார்வையிட்ட பின்னர் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தெரிய வருகிறது.

முகாம்களில் ஏற்படும் இராணுவத்தினரின் மரணம் முகாமிற்கு தேவையான இராணுவத்தினரின் எண்ணிக்கை, இராணுவத் தளபாடங்களின் எண்ணிக்கை,முகாமின் செயற்பாடுகள் என்பன குறித்துஇவ் வாராந்த அறிக்கையில் குறிப்பிடப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அதிகாரிஒருவர் தெரிவித்தார்.

"என் போராட்ட வரலாற்று சாதனைகளையிட்டு நான் மாபெரும் மகிழ்ச்சியும், பூரண திருப்தியும் அடைகின்றேன்"

- திலீபன்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
யாழ். மாவட்டம்,

(சி-7435)

## வரி விளம்பரம்

### இதோ: 4

இன்னும் சில தினங்களில் மாற்றம மக்கள் சஞ்சிகையின் ஆடி—புரட்டாதி இதழ். சிறு கதை, கவிதை, கட்டுரைகள் மற்றும் வழமையான அம்சங்களும் வெளிவருகின்றன. விலை ரூ 10/- (6066)

### ஆண்டு 4 வகுப்பு

ஆண்டு 4 (புலமைப்பரிசில் 1994) சனி, ஞாயிறு வகுப்புகள் சனி மு. ப 8-00—11-00 ஞாயிறு பி. ப. 2-00 — 5-00 நடைபெறும். வகுப்பு ஆரம்பம் 25-09-93 சனி தொடர்பு கொள்ளவும் புதிய கல்வி நிலையம், 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (5054)

### அராலியூரரின நாடகங்கள்

1955 1956ஆம் ஆண்டுகளில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில், பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நாடகங்களில் நடித்த-250 நாடகங்கள் எழுதிய அராலியூர் சுந்தரம்பிள்ளையின் நாடகங்கள்; 1. கெட்டிக்காரர்கள், 2 முதலாம்பிள்ளை 30/- (5838)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

### தொழிலாளர் கல்விச் சான்றிதழ் வழங்குதல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1989/90, 1990/91இல் தொழிலாளர் கல்விச் சான்றிதழ் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கான சான்றிதழ் 1993. 10 02 அன்று 10.00 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் வழங்கப்படும் என்பதை உரியவர்கள் கவனத்தில் கொள்ளுமாறு

## குடிநீர் இன்றி மாணவர் அவதி

தெற்பலி பண்டிதர் குடியிருப்பில் குடிதண்ணீருக்கு பெரும்தட்டுப்பாடு நிலவி வருகின்றது மக்கள் இதுவரை குடிதண்ணீர் பெற்று வந்த இரண்டு கைப்பம்புகளும் பழுதடைந்து விட்டதனால் மக்களும் இங்குள்ள பாடசாலைஆசிரியர்கள், மாணவர்களும் குடிநீர் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் பலமைல் தூரத்திற்கு நடந்து சென்றே மக்கள் தற்போது குடிநீரை பெற்று வருகின்றனர். [22]

## யாழ் இந்து அன்னை கண்ணீர் வடிக்கின்றாள்



தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மேலும் ஒரு அன்னையின் புதல்வன ஆகுதியானான்.
கடற்புலிகள் பொறியியற்றுறைப் பொறுப்பாளர்
**மேஜா மூர்த்தி அவர்களின்**
இழப்பினை அறிந்து இந்துவின்
சமூகம் ஆழ்ந்த கவலை அடைகின்றது.
அவன பாதையில் நாம்......

(சி-7458) யாழ் இந்துவின் சமூகம்
யாழ் இந்துக்கல்லூரி

## 1-ம ஆண்டு நினைவஞ்சலி



## ஆங்கில ஆசிரியர் பயிற்சி யாழ். இல் நடத்த முயற்சி

(யாழ்ப்பாணம்)

கல்வியமைச்சினால் அண்மையில் நியமனம் பெற்ற ஆங்கில ஆசிரியர்களுக்கான சேவை முன்பயிற்சியினை யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கு யாழ. கல்வித்திணைக்களம் யாழ் அரச அதிபர் ஊடாக நடவடிக்கை எடுத்துள்ளது.

மேற்படி ஆங்கில ஆசிரியர்களில் ஒரு தொகுதியினரை பொலன்னறுவைக்கும் மற்றுமொரு தொகுதியினரை வவுனியாவிற்கும் அடுத்த மாதம் முதலாம் திகதி வருமாறு அழைக்கப்பட்டிருந்தனர்.

இதனை அடுத்து தற்போது போக்குவரத்து வசதி இல்லாமை மற்றும் ஆசிரியர், பெற்றோர் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் வேண்டுகோளிற்கிணங்கவும் இந்தப் பயிற்சியினை யாழ்ப்பாணத்தில் நடாத்த யாழ் அரச அதிபரை கல்வியமைச்சு மற்றும் தேசிய கல்வி நிர்வாகம் ஆகியவற்றுடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுக்குமாறும் யாழ். கல்வித்திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது. [பா]

## பயமுறுத்தி பணம் பறிக்க முற்பட்ட மூவர் கைது

### ஒருவர் பொலிஸ் கான்ஸ்டபிளாம்

கொழும்பு புறக்கோட்டை புடைவை மொத்த விற்பனை நிலைய உரிமையாளரிடமிருந்து பல லட்சம் ரூபா பணம் பயமுறுத்திப் பெற முயன்ற வடக்கு மற்றும் கிழக்கைச் சேர்ந்த இளைஞர் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களுடன் பொலிஸ் தலைமை நிலயத்தைச்சேர்ந்த பொலிஸார் ஒருவரும் கைதாகியுள்ளார்.

பொலிசுக்குத் தகவல் கொடுப்பவர் என்ற வகையில் பொலிஸ் நிலையத்துச்செல்ல அனுமதிக்கும் விசேட அடையாள அட்டை ஒன்றும் இளைஞர் ஒருவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது.

வருமான வரி செலுத்த தவறியதாகக் கடை உரிமையாளரை பலமுறை தொலைபேசியில் எச்சரித்த பிறகு இந்த மூவரும் கடந்த வெள்ளியன்று தாம் வருமான வரி உத்தியோகத்தர் என்று கூறிப் பணம் வசூலிக்க முயற்சித்த போதே மடக்கிப் பிடிக்கப்பட்டனர். பின்பு கடை உரிமையாளர் பொலிசுக்கு அறிவித்து, அவர்களைப் பொலிசில் ஒப்படைத்தார்.

சந்தேக நபர்கள் எச் அபயவிக்கிரமா, அன்ரனி ராஜன், எஸ். ராஜன் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. கொழும்பு மேலதிக நீதபதி சந்தேக நபர்களை செப்டம்பர் 26ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கும்படி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
05- 10 1971
வீரச்சாவு
22 09 1991

### கப்டன் டானி
[சின்னத்துரை வசந்தகுமார் - வரதன்]

தாயக மீட்புப் போரிலே எங்கள்


## தொடர்பு கொள்ளவும்

குரக்கனை கையிருப்பில் வைத்திருப்போர் அதனை விற்பனை செய்ய விரும்பின் உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

கொள்வனவு விலை:
தீட்டிய குரக்கன் 1 கிலோ 26/- மட்டும்

நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

(1) தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாவட்ட, கோட்ட வட்ட தொடர்பாளர் அலுவலகங்கள்.

(2) உதயம் பல்பொருள் அங்காடி ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(3) மதுரம் பாண் தயாரிப்பகம் பலாலி வீதி, உரும்பராய்.

(4) காமதேனு விவசாய கால்நடைப் பண்ணை, வெள்ளை வீதி, சுன்னாகம். (சி-7462)


## நினைவு கூருகின்றோம் ... 1993-09-22

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு - களுவாஞ்சிக்குடி சிறிலங்கா காவல் நிலையத் தாக்குதலின்போது வீரச்சாவெய்திய

**லெப். ராஜா** (இராமலிங்கம் பரமதேவா - மட்டு)
**ரவி** (தம்பையா வாமதேவன் - கொக்கட்டிச் சோலை- மட்டு)

1985ஆம் ஆண்டு மட்டு - புல்லுமலைப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய- புல்லுமலைப் பிரதேசப் பொறுப்பாளர்-

**ராஜேஷ்** (இராசையா ஜெகநாதன் - கல்முனை - 02- அம்பாறை)

சிறிலங்கா காவற்படையினரால் கைதாகி, மட்டு நகர் காவல்நிலையத்தில் கொலை செய்யப்பட்டு எமைப்பிரிந்த-

★ **ஜேசு** (பி ஜேசுராசன் - வந்தாறுமூலை - மட்டு)

1988ஆம் ஆண்டு யாழ் - இணுவில் வைத்தியமனைக்கு முன்னால் தேசவிரோதிகளால சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான-

**பொன்னுத்துரை கணேசமூர்த்தி** (பாலாவோடை, உடுவில் கிழக்கு - யாழ்)

1990ஆம் ஆண்டு மண்டைதீவு முகாமிலிருந்து யாழ் - கோட்டைப் பகுதி நோக்கி சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**லெப் சுமன்** (முருகையா ஆனந்தன் - நல்லூர் குறுக்கு வீதி - யாழ்)

யாழ் - கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

**சுதர்சன்** (ஆறுமுகம் ஆனந்தராசா - கல்லூரி வீதி, இளவாலை - யாழ்)
**சத்தியன்** (பெரியண்ணன் ஜெயராசா - அம்பன் குடத்தனை - வடமராட்சி கிழக்கு)

சவுக்கடைப் பகுதியில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த போது சிறிலங்காப் படையினர் மற்றும் ஊர்காவற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 05 தமிழர்கள்.

யாழ்-சுடாநாட்டில் சிறிலங்கா விமானப்படையினர் பரவலாக மேற்கொண்ட விமானத் தாக்குதலில் ஒட்டு

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை

## தொழிலாளர் கல்விச் சான்றிதழ் வழங்குதல்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் 1989/90. 1990/91இல் தொழிலாளர் கல்விச் சான்றிதழ் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கான சான்றிதழ் 1993. 10 02 அன்று 10.00 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் வழங்கப்படும் என்பதை உரியவர்கள் கவனத்தில் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

பதிவாளர்.

(சி-7460)

---

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம் -
இலங்கை

## தொழிலாளர் கல்விச் சான்றிதழ் நெறி இரண்டாம அரையாண்டுப் பரீட்சை 1993

மேற்குறிப்பிட்ட பரீட்சை நவம்பர் மாதம் இரண்டாம் வாரத்தில் நடைபெற இருப்பதால் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கிளையில் பெறப்பட்ட விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து 15.10 1993 க்கு முன்பாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மீள் பரீட்சார்த்திகள் தமது பரீட்சைக் கட்டண பற்றுச் சீட்டுடன் தங்களது பரீட்சை விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ளவும். பரீட்சைக் கட்டணமாக ஒரு பாடத்திற்கு ரூபா 50/- வீதம் செலுத்த வேண்டும்.

பதிவாளர்.

(சி-7459)

---



## 2-ம் லெப். சூரியகலா

(சித்திரா ஆனந்தராஜா)
வட்டுக்கோட்டை

பிறப்பு: 19- 11- 1976
வீரச்சாவு: 02- 10- 1992

திதி: 22 - 09 - 1993

(இவர் 02 10. 92-ல் கட்டைக்காடு காவலரண் தகர்ப்பில் வீரச்சாவடைந்தார்.)

எண்ணமெலாந் தமிழீழ-
எல்லைகளிற் பதிந்திருக்கச்
சின்ன விழிச் சிறகசைத்து
செந்தமிழர் விலங்குடைக்கச்
சன்னமிடுந் துப்பாக்கிச்
சரமேந்திப் போர்க்களத்தே
வண்ணமகள் சித்திராவும்.
வாகைதனைச் சூடினாளே!
ஈரெட்டு வயது மகள்
எப்போதும் சிரித்தமுகம்,
போரிட்டுத் தான் மடிந்த
புனிதமனக் குடியிருப்பு!
ஐந்தறிவு விலங்கினையும்
ஆசையுடன் சேர்த்தணைக்கும்
பைந்தமிழ்த்தாய் பெற்றெடுத்த-
பாலகி, நம் சூரியகலா!

மற்றும், அந்நாளில் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களுக்கும் எமது வீர அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

22 09 93 (இன்று) எமது இல்லத்தில் நடைபெறும் அஞ்சலி நிகழ்வுகளிலும், மதிய போசனத்திலும் போராளிகள், நண்பர்கள், ஊரார் உறவினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

உன் பிரிவால் வாடும்
அன்பு அப்பா, அம்மா, சகோதரிகள்,
பெரியப்பா மற்றும் உறவினர்கள்.

சித்திரா வீதி,
வட்டுக்கோட்டை.

(6065)

---



பிறப்பு
05- 10 1971

வீரச்சாவு
22 09 1991

## கப்டன் டானி

[சின்னத்துரை வசந்தகுமார் - வரதன்]

தாயக மீட்புப் போரிலே எங்கள்
தலைவன் அணியிலே புலியானாய்.
பாயும் எதிரியை பாடையிலேற்றிடும்
பணியில் சுழலும் புயலானாய்
இரக்கமற்ற வெறியனை வீழ்த்தியே
மணலாற்றில் மாவீரனானாய்.

இவரது இல்லத்தில் இத்தினம் (22- 09- 93) நடைபெறும் கிரியையில் போராளிகள், உறவினர்களை கலந்து கொள்ளுமபடி அழைக்கின்றோம்.

உடுத்துறை வடக்கு. - குடும்பத்தினர்.

(6070)

---

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னைமடியில்
04 - 02 - 1969

ஆண்டவன் அடியில்
22 - 09 - 1990

கடற்புலி மேஜர்

## வின்சன் - யப்பான்

[நவரட்ணம் வசந்தன்]

தாயின் மடியினுள் தவழ்ந்த நிலவும் - தன்
ஆவியும் பிரித்து ஆழியினுள் புகுந்ததுவோ!
ஆண்டுகள் மூன்றும் ஆயினும் உன் அன்புமுகம்
எங்கள் நெஞ்சை விட்டும் நீங்கிடுமோ!

இங்ஙனம்
என்றும் உன் நினைவுடன் வாழும்
குடும்பத்தினர்.
உறவினர். நண்பர்கள்.

மேஜர் வின்சன் வீதி,
வல்வெட்டித்துறை.
22 09-1993

[6060]

---

1988ஆம் ஆண்டு யாழ் - இணுவில் வைத்தியமனைக்கு முன்னால் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான-

பொன்னுத்துரை கணேசமூர்த்தி (பலாலிவீதி, உடுவில் கிழக்கு - யாழ்)

1990ஆம் ஆண்டு மண்டைதீவு முகாமிலிருந்து யாழ் - கோட்டைப் பகுதி நோக்கி சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

லெப் சுமன் (முருகையா ஆனந்தன் - நல்லூர் குறுக்கு வீதி - யாழ்)

யாழ் - கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

சுதர்சன் (ஆறுமுகம் ஆனந்தராசா - கல்லூரி வீதி, இளவாலை - யாழ்)

சத்தியன் (பெரியண்ணன் ஜெயராசா - அம்பன் குடத்தனை - வடமராட்சி கிழக்கு)

சவக்கடைப் பகுதியில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த போது சிறிலங்காப் படையினர் மற்றும் ஊர்காவற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 05 தமிழர்கள்.

யாழ்-குடாநாட்டில் சிறிலங்கா விமானப்படையினர் பரவலாக மேற்கொண்ட விமானத் தாக்குதலில் ஒட்டுமடம், திருநெல்வேலி, நல்லூர் ஆகிய பகுதிகளில் கொலையுண்ட 4 பொதுமக்கள்.

1991ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

திவாகர் (மாணிக்கம் மகேஸ்வரன் - துறைநீலாவணை மட்டு)

மனோச் (கண்டுமணி அருள் - மூதூர் - திருமலை)

2 ம் லெப். சரத் (செபஸ்தியாம்பிள்ளை அற்புதராசா- மணற்குடியிருப்பு - முல்லைத்தீவு)

ஜெனந்தினி (செல்வராணி விநாயகமூர்த்தி - 2ஆம் வட்டாரம் முள்ளியவளை)

நிமல் / வேங்கையன் (தங்கவேல் சிவானந்தன் - நைனாமடு - நெடுங்கேணி)

2-ம் லெப். நியூட்டன் (சோமசேகரம் ராஜயோகம் - ஓமந்தை - வவுனியா)

2-ம் லெப். சுபீர / இளங்குட்டுவன் (ஆனந்தராசா மனோகரராசா 154மகட்டை - கிளிநொச்சி)

ரூபமதி (வசந்தி மகாலிங்கம் - முழங்காவில் - மன்னார்)

கப்டன் டானி (சின்னத்துரை வசந்தகுமார் - உடுத்துறை, தாளையடி - வடமராட்சி கிழக்கு)

கப்டன் விக்ரம் (செல்லத்துரை உதயகுமார் - மிருசுவில் தெற்கு - கொடிகாமம்)

2-ம் லெப். சங்கீதா (வசந்தகுமாரி நடராசா - நவாலி வடக்கு, மானிப்பாய் - யாழ்)

2-லெப். சனத் (செபஸ்தியாம்பிள்ளை ஜெயசீலன் - கட்டைக்காடு முள்ளியான் - வடமராட்சி)

கருணை திருமால் (இராசா கண்ணன் - சுதுமலை தெற்கு மானிப்பாய் - யாழ்)

வினோத் (இராசையா யுவராஜா - வத்திராயன் வடக்கு. தாளையடி - வடமராட்சி)

தர்மிலா (மாலா மயில்வாகனம்-ஆழியவளை, தாளையடி வடமராட்சி)

சுமங்கலி (மல்லிகா விஜயரட்ணம் - சங்கத்தார்வயல்- இயக்கச்சி)

ரஜனி / ராஜினி (குயின் பத்மா தியாகராசா இராசாவின் தோட்டவீதி -யாழ்)

மட்டு - கஞ்சிருடிச்சாறுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

சுபாஸ் (விவேகானந்தன் விவேகரட்ணம் - கோமாரி அம்பாறை)

கிறி (கதிர்காமத்தம்பி ஆனந்தராசா-இருதயபுரம் -மட்டு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ இக்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

[சி-7457]

### சிந்தனைக்கு

அவமதிப்புக்கு ஆளாகுவதற்கு தன்னை அனுமதிப்பவன் அவமதிப்புக்கு அருகதை உடையவனே ஆவான்.

- பியோ கொர்னேய்ல்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 22-09-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2028

த. பெ. எண்-05


## தமிழ் குழுக்களின் அவலம்

கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களுக்கு மெல்லவும் முடியாத விழுங்கவும் முடியாத ஓர் இக்கட்டான நிலையை சிறிலங்கா ஜனாதிபதி டிங்கிரிபண்டா விஜேதுங்கா ஏற்படுத்தியுள்ளார். டிங்கிரி பண்டா ஏற்படுத்திய இந்த இக்கட்டான நிலை அவர்களின் 'அரசியல் சித்தாந்த'த்தை ஒரு எல்லைக்குக் கொண்டு வந்து விட்டதால், அவர்கள் யாவரும் தவித்துப் போயுள்ளார்கள்.

சிங்களப் பேரினவாதிகள் போன்றே தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான யுத்தத்தை 'பயங்கரவாதத்திற்கு' எதிரான போர் எனக் கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களும் கூறிக் கொண்டன. ஆனால், சிங்களப் பேரினவாதம் பெயருக்கு 'பயங்கரவாதத்திற்கு' எதிரான போராட்டம் எனக் கூறிக் கொண்டாலும், தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான போராட்டம் என்பதை நன்கே விளங்கியிருந்தது. தமிழ்க் குழுக்கள் இதனை விடுதலைப் புலிகளுக்கு எதிரான போராட்டமாகவே எண்ணின.

இதேவேளை, விடுதலைப் புலிகளுக்கு எதிரான போராட்டமானது தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான போராட்டம் என்பதைத் தமிழ்க் குழுக்களும் அறிந்தே இருந்தன. ஆனால், தனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை எதிரிக்குச் சகுனப் பிழை ஏற்பட்டால் போதும் என்ற நிலையில் செயற்பட்ட தமிழ்க் குழுக்கள், தமிழர்தேசிய இனவிடுதலைப் போராட்டம் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை, விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டால் போதும் என்றே செயற்பட்டன.

ஆனால், இவர்களிடம் ஒரு சில கனவுகளும் இருக்கத்தான் செய்தன. அதாவது, புலிகள் தோற்கடிக்கப்பட்டபின், சிங்களப் பேரினவாதம் 'தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு' என சில அற்ப சொற்ப சலுகைகளைத்தானும் - குறைந்தது வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்குத் தனித்தனி மாகாண சபைகளையாவது - தமக்கு வழங்கும் என எதிர்பார்த்திருந்தன. இந்நிலையில்தான் தெரிவுக்குழுவில் சில தீர்வுத் திட்டங்களையும் இவை முன்வைத்தன.

### தற்கொடையின் எல்லை

பாரதத்தின் முகத்திரையைக் கிழித்தெறிந்தாய்
பாசிசத்தின் நிஜவடிவம் தெளியவைத்தாய்
சீரழியும்தமிழீழ மக்கள் வாழ்வை - நீயும்
திசைதிருப்பும் மாலுமியாய் பணிபுரிந்தாய்
ஊரெழுவில் ஒளிப்பிழம்பாய் பிறந்துவந்தாய்-நல்ல
ஒப்பற்றதலைவனணி இணைந்து நின்றாய்
தீரமுடன் நெஞ்சுறுதி கொண்டேநீயும் - பசித்
தீயினையே தின்றுலகின் மனதைவென்றாய்

வேரோடு கருவறுத்து மாய்க்க வந்த - இந்தி
வெறியர்களைத் தலைகவிழ்ந்து வெட்கவைத்தாய்
போராடும் களவேங்கை அகிம்சை என்ற - புனிதப்
போருலகில் புதியதொரு வரலாறானாய்
தேரோடும்நல்லைநகர் வீதிதன்னில் - எங்கள்
திலீபன் நீ கற்பூரம் போலெரிந் தாய்
நீர்கூட அருந்தாது செய்த யாகம் - இந்த
நிலமுள்ள வரை மக்கள் நெஞ்சில் வாழும்

கோட்டையொடு கொக்காவில் மாங்குளத்தில் -
புலிக்
கொடிபறக்கும் காட்சியினைக் கண்டிருப்பாய்!
வேட்கையுடன் நீமொழிந்த வாறுநாளை -
தோழருடன்
விண்ணிருந்து தமிழீழம் மலர்தல் காண்பாய்
"பூட்டிவைக்கமுடியாது புயலைக்கூண்டில்- மக்கள்
புரட்சியெனும் நெருப்பினையும்
அணைக்கொணாது"
...பாட்டினிலே உனைஎழுதவார்த்தை இல்லை -
எங்கள்
பார்த்திபனே! நீயே தற் கொடையின் எல்லை.

- நிலா தமிழின் தாசன்

## மாகாணசபைகல்வி அதிகாரி செய்தியாளர் மீது பாய்ச்சல்

வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் கல்விப் பணிப்பாளர் செல்வி பெரியதம்பி பத்திரிகையாளர்களைச் சந்திக்க மறுப்புத் தெரிவித்துள்ளார்.

உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு யாழ் வந்திருக்கும் இவர் யாழ் கல்வித் திணைக்களத்தில் சில உத்தியோக கடமைகளில் ஈடுபட்டுவருகிறார்.

இவரைசந்திப்பதற்குசென்ற பத்திரிகையாளர் மீது இவ் அதிகாரி பாய்ந்து விழுந்தாராம். பத்திரிகையாளரைக் கண்டதும் இவர் திடீரென கோபமடைந்த நிலைக்கு தள்ளப்பட்டவராக காணப்பட்டார். எனது வேலைகளை நான் கவனிப்பேன் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கவேண்டிய அவசியம் எனக்கு இல்லை என்றும் இவர் கூறினார்.

## முன்னாள் மேயர் மீது துப்பாக்கிப் பிரயோகம்

(நுவரெலியா)

நுவரெலியா மாநகரசபை முன்னாள் மேயரும், ஐக்கிய தேசிய கட்சியின் மாவட்ட உறுப்பினருமான பந்துசேன விரரட்ண மீது துப்பாக்கி பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாக நுவரெலியா பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இரவு 10 மணிக்கு அவரது நுவரெலியா வீட்டில் வைத்து மேற்படி சம்பவம் நடைபெற்றதாகவும், இது தொடர்பான விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருவதாக தெரிய வருகின்றது.

# ஒரு 'புலி'யைக் கொல்ல 300 இலட். அரசு செலவிடுகிறதாம்!

(கொழும்பு)

சிறிலங்கா அரசு ஒரு புலியைக் கொல்ல 300 லட்சம் ரூபாவைச் செலவிடுகிறது என மக்கள் நண்பர் அமைப்பின் இணை அமைப்பாளரான சம்பிக ரணவக்க கூறியுள்ளார்.

காலி நகர சபையில் நடைபெற்ற இந்த அமைப்பின் கருத்தரங்கில் பேசிய அவர் இந்த அரசு இந்தவருடமும் மூவாயிரம் கோடியை வெளிநாட்டு நிதி உதவியாகப் பெற்றுக் கொண்டு யுத்தம் புரிகிறது கடந்த காலத்தில் கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் எண்ணிக்கையை அரசின் புள்ளிவிபரங்களுடன் கணக்கிட்டால் ஒரு புலியைக் கொல்ல 300 லட்சம் ரூபாவை அரசு செலவிட்டுள்ளதை அவதானிக்கலாம்.

நாட்டில் 30 லட்சம் இளைஞர்களும் யுவதிகளும் தொழிலின்றி அலைகின்றனர். நாட்டில் 60 சதவீத மானோருக்கு போஷாக்கு இல்லை. இலங்கையையும் சோமாலியாவாக மாற்ற முயற்சி நடைபெறுகிறது. இதற்கு நாம் இடமளிக்க முடியுமா? படுகொலை அரசியலை முடிவுக்குக் கொண்டு வருவது எவ்வாறு? என்றெல்லாம் நாம் சிந்திக்க வேண்டும்.

இந்த நாட்டுக்குள் எமது வளத்தைக் கொண்டே கட்டியெழுப்பப்பட்ட தொழில் நுட்பம் 1956 இல் ஆரம்பமாகி 1977 வரை தொடர்ந்தது. இக்காலத்தில் ஆட்சியாளரிடம் என்ன தவறு இருந்தாலும் நாட்டை வெளிநாட்டவருக்கு அடிமைப்படுத்தாமல் ஆட்சி செய்து வந்தனர். வெளிநாட்டு மூலதன திட்டத்தின் கீழ் இந்நாட்டு முன்னேற்றத்தை எதிர்பார்க்கமுடியாதுஎனவும் அவர் இங்கு குறிப்பிட்டார்.

### ஆசிரியர் பயிற்சிநெறி

[தொல்புரம்]

யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளின் பாடசாலைகளில் ஆசிரியப் பயிற்சி பெறாமல் கடமை புரிவோருக்கு பயிற்சிநெறி ஒன்று ஆரம்பிக்கப் படவுள்ளது.

யாழ் மாநகர சுகாதாரப் பணிமனையில் ஆரம்பிக்கப்படவுள்ள மேற்படி பயிற்சி நெறியில் சனசமூக நிலையங்கள், பொதுஸ்தாபனங்களால் நடாத்தப்படும் பாலர் பாடசாலைகளில் கடமைபுரிவோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும் எனவும், பயிற்சி நெறியில் பங்கு கொள்ள ஆர்வமுள்ளோர் பணிமனைக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [41]

## புலிகள் என சந்தேகம்; மன நோயாளி கைது

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் உளவாளி என்ற சந்தேகத்தின் பேரில் சித்த சுவாதீனமற்ற தமிழ்யுவதி ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டிருக்கிறார். கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தின் அருகில் வீதி ஓரத்தில் நிற்கும் போதே இந்த யுவதி கைதுசெய்யப்பட்டிருக்கிறார். கைது செய்யப்பட்ட மேற்படி தமிழ் யுவதி அதிகம் பேசுவதில்லை என்றும் எனினும் விசாரணைகள் தொடர்வதாக பொலிஸ் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## தொழில் கல்வி டிப்ளோமா; விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் தொழில் நுட்பவியல் தேசிய டிப்ளோமா கற்கை நெறியில் சேரலாம். 1992/93 ஆண்டுகளிற்கான தெரிவின் கீழ் இவர்களை சேர்த்துக் கொள்ள பல்கலைக்கழகம் தீர்மானித்துள்ளது.

தூய கணிதம், பிரயோக கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல், ஆகியவற்றை உள்ளடக்கி க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் இக் கற்கை நெறிக்குச் சேர்க்கப்படவுள்ளனர்.

ஒவ்வொரு பாடத்திலும் பெறும் தகைமைகளுக்கேற்ப புள்ளிகள் போடப்பட்டு புள்ளிகளின் எண்ணிக்கையின்படி தெரிவாவர். ஏ தகைமைக்கு 04 புள்ளிகள் பி: 03, ஸி: 02, எஸ்: 01 எனும் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும். தகுதியானோர் அடுத்தமாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் மொரட்டுவப் பல்கலைக்கழகப் பதிவாளருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

## வன்னிப் பகுதியில் திலீபன் நினைவு நிகழ்வுகள்

(வவுனியா)

வவுனியா பூவரசங்குளம் வட்டத்தில் சிறிலங்கா விமானப்படை குண்டுவீச்சு விமானங்களின் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் பல ஆயிரக்கணக்கான மக்கள் தியாகி திலீபனின் 6-ம் ஆண்டு நினைவு நிகழ்வில் கலந்து கொண்டனர்.

வவுனியா பூவரசங்குளம் வட்டத்தில் தியாகி திலீபன் அஞ்சலிக்கூட்டமும் 9-ம்மாதங்களில் வீரச்சாவெய்திய மாவீரர்களான 10 மாவீரரின் நினைவு கூரல்கூட்டமும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந் நிகழ்வில வன்னி மாவட்ட துணை அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ஞானம், பூவரசங்குள வட்ட மகளிர் பொறுப்பாளர் செல்வி முத்துநகை,வவுனியாகோட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. சிபி ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இந் நிகழ்வின்போது கலந்து கொண்ட 3000ற்கு மேற்பட்ட மக்களுக்கு குருக்கல் புதுக்குளம மக்களால்அன்னதானம் வழங்கப்பட்டதுடன் திலீபனை நினைவு கூர்ந்து கவிதை, கட்டுரை, மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன

காஷ்மீர் விவகாரம் தொடர்பாக

ரான போராட்டமானது தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான போராட்டம் என்பதைத் தமிழ்க் குழுக்களும் அறிந்தே இருந்தன. ஆனால், தனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை எதிரிக்குச் சகுனப் பிழை ஏற்பட்டால் போதும் என்ற நிலையில் செயற்பட்ட தமிழ்க் குழுக்கள், தமிழர்தேசிய இனவிடுதலைப் போராட்டம் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை, விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டால் போதும் என்றே செயற்பட்டன.

ஆனால், இவர்களிடம் ஒரு சில கனவுகளும் இருக்கத்தான் செய்தன. அதாவது, புலிகள் தோற்கடிக்கப்பட்டபின், சிங்களப் பேரினவாதம் 'தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு' என சில அற்ப சொற்ப சலுகைகளைத்தானும் - குறைந்தது வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்குத் தனித்தனி மாகாண சபைகளையாவது - தமக்கு வழங்கும் என எதிர்பார்த்திருந்தன இந்நிலையில்தான் தெரிவுக்குழுவில் சில தீர்வுத் திட்டங்களையும் இவை முன்வைத்தன.

ஆனால், டிங்கிரி பண்டாவின் 'இலங்கையில் இனப்பிரச்சினை என்பதே இல்லை' என்ற அறிவிப்பானது, இவர்களின் தலையில் பெரும் இடியை வீழ்த்தியது. இவ் அறிவிப்பின் மூலம், இவர்களின் எதிர்காலக் கனவுகளை சிறிலங்கா ஜனாதிபதி பேரினவாதத் தலைவருக்குரிய நிலையில் நின்று கலைத்து விட்டார். அதாவது, இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லை என்பது தமிழருக்கு வழங்குவதற்கு எதுவுமே இல்லை என்றதன் மறைமுக அறிவிப்பே ஆகும்.

சிங்களப் பேரினவாதத் தலைவர்கள் இவ்வாறானதொரு அறிவிப்பை வெளியிட்டதைக் குறித்து ஆச்சரியப்பட ஏதுமில்லை. ஏனெனில், சிங்களத் தலைவர்கள் தமிழர் தாயகத்தைக் கபளிகரம் செய்யவும், தமிழ் இனத்தை அழித்து விடுவதிலும் குறி தவறாதே உள்ளனர் என்பது சகலருக்கும் தெரிந்ததே, ஆகையினால் தமிழ்க் குழுக்களும் இதை விளங்கிக் கொள்ளாமல் இருந்திருக்க முடியாது.

ஆனால், பேரினவாதத் தலைமை எதிர்பார்த்ததை விட விரைவாகவே தமது வேடத்தைக் கலைத்துக் கொண்டமை தமிழ்க் குழுக்களுக்குப் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில், தமிழருக்கு எதிராகச் சிங்களப் பேரினவாதம் தொடுத்துள்ள போரை பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என ஆதரித்தாலும், போரின் பின், அதாவது காட்டிக்கொடுப்பின் பின் தமக்கு ஏதும் சலுகைகள் கிட்டுவதற்கு வாய்ப்பில்லை என்பதே அவர்களிற்கு இன்று ஏற்பட்டுள்ள குழப்பமாகும்.

அதாவது, 'பயங்கரவாதம்' எனத் தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை தமிழ்க் குழுக்களால் கூறிக் கொள்ள முடியாது. அவ்வாறில்லாமல் அதை ஏற்றுக் கொள்வார்களேயானால் தமிழ் இனத்தை வெளிப்படையாகவே காட்டிக் கொடுத்தவர்களாவார்கள். இது அவர்களின் அரசியற் தற்கொலைக்குச் சமனாகும், இதே வேளை இவர்கள் சிங்கள அரசிற்கெதிராக உரத்துக் குரல் கொடுக்கக் கூடிய ஒரு பலமான அரசியல், இராணுவ சக்தியும் அல்ல. அரசிற்கெதிராக இவர்களால் உரத்த குரலில் பேசக் கூட முடியாது. அவ்வாறு பேசின் விரும்பிய இடத்திற்கு இவர்களை மூட்டை கட்டிவிட அரசால் முடியும். இவ்வாறாகவுள்ள தமிழ்க் குழுக்களின் இன்றைய நிலை 'திரிசங்கு' நிலை என்பதா? நட்டாற்றில் கைவிடப்பட்டவர்கள் என்பதா? இதில் எது பொருந்தும்? இரண்டுமே பொருந்தும்.

உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு யாழ் வந்திருக்கும் இவர் யாழ் கல்வித் திணைக்களத்தில் சில உத்தியோக கடமைகளில் ஈடுபட்டுவருகிறார்.

இவரைசந்திப்பதற்குசென்ற ...ளப்பட்டவராக காணப்பட்டார். எனது வேலைகளை நான் கவனிப்பேன் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கவேண்டிய அவசியம் எனக்கு இல்லை என்றும் இவர் கூறினார்.

## முன்னாள் மேயர் மீது துப்பாக்கிப் பிரயோகம்

(நுவரெலியா)

நுவரெலியா மாநாகரசபை முன்னாள் மேயரும், ஐக்கிய தேசிய கட்சியின் மாவட்ட உறுப்பினருமான பந்துலசேன வீரரட்ன மீது துப்பாக்கி பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாக நுவரெலியா பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இரவு 10 மணிக்கு அவரது நுவரெலியா வீட்டில் வைத்து மேற்படி சம்பவம் நடைபெற்றதாகவும், இது தொடர்பான விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருவதாக தெரிய வருகின்றது.

...ருட்பட்ட பகுதிகளின் பாடசாலைகளில் ஆசிரியப் பயிற்சி பெறாமல் கடமை புரிவோருக்கு பயிற்சிநெறி ஒன்று ஆரம்பிக்கப் படவுள்ளது.

யாழ் மாநகர சுகாதாரப் பணிமனையில் ஆரம்பிக்கப்படவுள்ள மேற்படி பயிற்சி நெறியில் சனசமூக நிலையங்கள், பொதுஸ்தாபனங்களால் நடாத்தப்படும் பாலர் பாடசாலைகளில் கடமைபுரிவோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும் எனவும், பயிற்சி நெறியில் பங்கு கொள்ள ஆர்வமுள்ளோர் பணிமனைக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [41]

(வவுனியா)

வவுனியா பூவரசங்குளம் வட்டத்தில் சிறிலங்கா விமானப்படை குண்டுவீச்சு விமானங்களின் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் பல ஆயிரக்கணக்கான மக்கள் தியாகி திலீபனின் 6-ம் ஆண்டு நினைவு நிகழ்வில் கலந்து கொண்டனர்.

வவுனியா பூவரசங்குளம் வட்டத்தில் தியாகி திலீபன் அஞ்சலிக்கூட்டமும்9-ம்மாதங்களில் வீரச்சாவெய்திய மாவீரர்களான 10 மாவீரரின் நினைவு கூரக்கூட்டமும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந் நிகழ்வில் வன்னி மாவட்ட துணை அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ஞானம், பூவரசங்குள வட்ட மகளிர் பொறுப்பாளர் செல்வி முத்துநகை, வவுனியா கோட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. சிபி ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இந் நிகழ்வின்போது கலந்து கொண்ட 3000ற்கு மேற்பட்ட மக்களுக்கு குருக்கள் புதுக்குளம மக்களால் அன்னதானம் வழங்கப்பட்டதுடன் திலீபனை நினைவு கூர்ந்து கவிதை, கட்டுரை, மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன

# இஸ்ரேலுக்கு எதிராக போரிட ஈரான் வேண்டுகோள்

[தெகிரான்]

ஈரானிய ஆத்மீகத் தலைவர் அயதொல்லா கொமேனி இஸ்ரேலுடன் சமாதான ஒப்பந்தம் செய்து கொண்ட அரபாத்தைக் கடுமையாகத் தாக்கியதுடன் ஒப்பந்தத்திற்கு எதிராகப் போரிடும்படி இஸ்லாமிய உலகிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேற்கண்ட சுபாட்சி ஒப்பந்தத்தை பலமாகத் தாக்கியுள்ள கொமேனி இஸ்ரேலுக்கு எதிரான போராட்டம் தொடரும் எனவும் தமது டெலிவிசன் உரையில் தெரிவித்தார்.

இஸ்ரேலியத்தின் எதிரிகள் தங்களை ஒருபடி முன்னேறியிருப்பதாகக் கருதுகின்றார்கள். ஆனால் இஸ்லாமிய உலகம் எதிர்த்தாக்குதல் மூலம் அவர்களைப் பின்நோக்கித் தள்ள வேண்டும் என்றார்.

அரபாத் பாலஸ்தீனநாடு அல்ல. சரித்திரத்தில் நூற்றுக்கணக்கான அட்டூழியங்களை இழைத்தவர்களுடன் ஒப்பந்தம் செய்ய 'அரபாத் யார்?' அமெரிக்கர்களுக்கும் சியோனிச தலைவர்களுக்கும் பலஸ்தீனியர்கள் தொடர்ந்தும் ஆக்கிரமிப்பாளர்களின் தலைவிக் அடிமைகள் என்பதைத் தெரிந்து கொள்ளவும் வேண்டும் என்றார்.

ஈராக்கிற்கு எதிரான

## பொருளாதாரத் தடை தொடர்ந்து நீடிக்கும்

(நியூயோர்க்)

ஈராக்கிற்கு எதிரான வர்த்தகத் தடையைத் தொடர்ந்தும் நீடிப்பதற்கு ஐ. நா. பாதுகாப்பு சபை நேற்று முன்தினம் முடிவு செய்துள்ளது.

நேற்றுமுன்தினம் ஐ. நா. பாதுகாப்புச் சபை கூடிய போது ஈராக் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையை நீக்குவதற்கு பொருத்தமான காலச் சூழ்நிலை இன்னமும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது இதேவேளை ஈராக் இதுவரை அடைந்த முன்னேற்றம் தொடர்பாக ஐ. நா. பாதுகாப்புச் சபை பகிரங்கமாய் பாராட்டு தெரிவிக்க வேண்டும் என்று சீனாவும், சில அணிசேரா நாடுகளும் விருப்பம் தெரிவித்துள்ளன. ஆயினும் அமெரிக்காவும், பிரிட்டனும் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

## சல்மான் ருஷ்டிக்கு 'இலக்கிய விருது'

(லண்டன்)

"சாத்தானின் வசனங்கள்" என்ற நூலை எழுதியதன் மூலம் சர்ச்சைக்கு உள்ளாகி ஈரானிய அரசால் மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் எழுத்தாளர் சல்மான் ருஷ்டிக்கு பிரிட்டனில் உயர் இலக்கிய விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது.

## முதல்வரின் குற்றச்சாட்டு ஆதார பூர்வமற்றது

– அர்ஜுன்சிங் தெரிவிப்பு

[சென்னை]

தமிழ்நாடு அரசை டிஸ்மிஸ் செய்ய மத்திய அரசு முயலுவதாக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்திருக்கும் குற்றச்சாட்டு ஆதாரமற்றது ஆகும் என்று மத்திய அமைச்சர் அர்ஜுன்சிங் கூறியுள்ளார்.

சென்னை அருகே குரோம்பேட்டையில் ராஜீவ் காந்தியின் முழு உருவச் சிலையைத் திறந்து வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், மதத்திலிருந்து அரசியலைப் பிரிப்பதற்கான மசோதாவின் நோக்கம் மதத்தை அரசியலில் தவறாக பயன்படுத்துவதை தடுப்பதேயாகும் என்றும் தெரிவித்தார்.

## தற்கொலைத் தாக்குதல்

இஸ்ரேலினால் கைப்பற்றப்பட்டிருக்கும் காஸா தொடைப் பிரதேசத்திலுள்ள இஸ்ரேலிய பொலிஸ் நிலையம் ஒன்றை பாலஸ்தீன தற்கொலை குண்டு வெடிப்பு கொலையாளி ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமைதாக்கினார் இந்த முயற்சியில் அவர் மரணமானார்.

காஷ்மீர் விவகாரம் தொடர்பாக

## பாகிஸ்தானின் புதிய அரசுடன் இந்தியா பேச்சு நடத்தலாம்

(தெகிரான்)

பாகிஸ்தானில் தேர்தல்கள் நடந்து முடிந்த பின்னர் அமைக்கப்படும் புதிய அரசாங்கம் ஆர்வம் காட்டினால் காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக பேச்சு நடத்துவதற்கு இந்தியா தயாராக இருப்பதாக இந்தியப் பிரதமர் பி வி. நரசிம்மராவ் தெரிவித்தார்.

தெகிரானில் ஈரானிய அதிபர் அலி அக்பர் ரப்சஞ்சானியுடன் பேச்சு நடத்திய போது பிரதமர் வி. பி. நரசிம்மராவ் மேலும் கூறுகையில், இந்தியாவில் வசிக்கும் சிறுபான்மையினர் அனைவரையும் நம்பத்தக்க முடிவாக்கவே நடத்தப்படுவதாகவும், இந்தியாவிலுள்ள சிறுபான்மையோர் வெளிநாடுகளின் உதவி வேண்டிச் செல்வதில்லை எனவும் சுட்டிக் காட்டினார்.

அத்துடன்காஷ்மீர் பிரச்சினை இந்தியாவின் உள்நாட்டு விவகாரமே என்றும், இப் பிரச்சினையை எப்படித் தீர்த்துக் கொள்வது என்பதை இந்தியா நன்கு உணர்ந்து கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

பரஸ்பரம் ஒத்துழைப்பை வளர்த்துக் கொள்வதற்கு ஏதுவாக இப் பிராந்தியத்திலுள்ள நாடுகளுக்கிடையே கருத்துப் பரிவர்த்தனையை அதிகப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஈரானிய அதிபர் தமது பேச்சின்போது காஷ்மீரில் காணும் நிலை தொடர்பாக ஈரான் கவலை கொண்டுள்ள போதும் இந்தியாவின் உள்நாட்டு பிரச்சினையில் தலையிடப் போவதில்லை எனவும் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமரைவிமான நிலையம்வரை சென்று ஈரானிய அதிபர் வரவேற்றமை மிகுந்த முக்கியத்துவம்கொண்டதாக ராஜதந்திரவட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

பழநி தொகுதியில்

## 26 வாகனங்கள் பறிமுதல்

### ஆட்சித் தலைவர் அறிவிப்பு

[சென்னை]

பழநி மக்களவைத் தொகுதியில் தேர்தல் விதிமுறைகளுக்கு முரணாக வாக்காளர்களை ஏற்றிச் செல்வதற்கு பயன்படுத்தப் பட்ட 26 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டதாக திண்டுக்கல் அண்ணா மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியுள்ளார்.

இதேவேளை பழநித் தொகுதியில் பல வாகனங்கள் முறைகேடாக பயன்படுத்தப்பட்டது பற்றி தேர்தல் ஆணையகத்திற்கு புகார்கள் கிடைத்திருப்பதாகவும், வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பது பற்றி தலைமைச் செயலர் அறிவித்து இருப்பதாகவும் தேர்தல் ஆணையகம் கூறியுள்ளது.

நன்னீர் பேணி நலங்களைப் பெறுவோம்.

ஈழநாதம்

# புதிய இராணுவத்தினருக்கு வடக்கு கிழக்கில் பயிற்சி

## சுவாத்தியம் பழக்கப்படுமாம்

[கொழும்பு]
இராணுவத்தில் கடந்த மாதம் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட 7500 பேரில் பெரும் பகுதியினர் வடக்கு கிழக்குப்பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு அங்கு வைத்து அவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் இவ்வாறு புதிதாகச்சேர்த்துக்கொள்ளப்படுபவர்கள் தியத்தலாவ-பனாகொட போன்ற முகாம்களில் வைத்து பயிற்சி வழங்கப்படுவதே நடைமுறையாக இருந்தது ஆனால் இப்பொழுது 300 பேர்களைக்கொண்ட பட்டாலியன்களாக வடக்கு கிழக்கு முகாம்களுக்கு அனுப்பப்பட்டு அங்கு வைத்து பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு வடக்கு கிழக்கில் வைத்து பயிற்சி வழங்குவதன் மூலம் அங்குள்ள சுவாத்தியம் பழக்கப்படவும் சூழலை பழகிக் கொள்ளவும் வாய்ப்பாக இருக்கும் என இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## பரிசளிப்பு விழா

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறும். இவ் விழாவிற்கு யாழ். பல்கலைக் கழக கணித புள்ளி விபரவியற்றுறைத் தலைவர் பேராசிரியர் வே. தர்மரட்ணம் அவர்களும், அவர் தம்பாரியாரும் பிரதம விருந்தினராக கலந்து கொள்வர்.

★

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி ஸ்தாபகர் நினைவு நாளும், பரிசளிப்பு விழாவும் இன்று மு.ப. 9.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

## பொன் விழா மலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)
யாழ். இந்துமகளிர் கல்லூரி பொன்விழா மலர் வெளியீடும் நிறைவுப் பேருரையும் நாளை காலை 9.00 மணிக்கு விசாலாட்சி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



## உதைபந்தாட்டம்

வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மகாவித்தியாலயத்திற்கும் கொட்டடி நமசிவாய வித்தியாலயத்திற்கும் இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி இன்று பிற்பகல் கொட்டடி நமசிவாய வித்தியாலயமைதானத்தில் நடைபெறும்.

எறிகணை

கொண்டனர். இவ் எறிகணைகள் மூளாய் மக்கள் குடியிருப்புக்களை அண்மித்த பகுதிகளிலும், பொன்னாலை குடியேற்றத்திட்ட வீடுகள் அமைந்த பகுதிகளின் அருகாமையிலும் வீழ்ந்து வெடித்தன இச் சம்பவத்தின்போது உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிய வருகிறது. (41)

வடக்கில்

உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க, வடக்கில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள இராணுவத்தினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இக்கூட்டத்தின் பின்னர் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க பல சிரேஷ்ட அமைச்சர்களையும் சந்தித்து தனித்தனியே பேச்சுக்களை நடாத்தியதாகவும் தெரியவருகிறது.

யாழ்

திருநெ... அக்குடன் கடைகளில்

## கல்மடுவில் திலீபன் நினைவஞ்சலி

(வவுனியா)
கல்மடுவில் நேற்று முன்தினம் தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபன் உட்பட இதே மாதத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்களை நினைவு கூர்ந்து நினைவஞ்சலிக் கூட்டமும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

வவுனியா மாவட்டத்திலுள்ள கல்மடு 2ஆம் படிவ பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற மேற்படி நிகழ்வுகளில் ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.

## திலீபனின் நினைவு உண்ணாவிரதம்

தியாகி லெப். கேணல் திலீபனின் ஆறாம்ஆண்டு நினைவு நிகழ்வுகளை முன்னிட்டு பாஷையூர்- கொழும்புத்துறை வர்த்தக அமைப்பு இன்று பாஷையூர் அர்ச். அந்தோனியார் ஆலய முன்றலிலும் நாளை கொழும்புத்துறை சந்தை முன்றலிலும் ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்ள உள்ளது.

# ருகுணு கப்பலில் யூரியா வர்த்தகரைதேடி வலைவீச்சு

[கொழும்பு]
ருகுணுகப்பலில 10மெ.தொன் யூரியாவை கடத்திச் செல்ல முயன்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கொழும்பு வர்த்தகரை கைது செய்ய அனைத்து பொலிஸ் நிலையங்களும் உஷார்படுத்தப்பட்டுள்ளதாக சிறிலங்கா வானொலி தெரிவித்தது.

புறக்கோட்டை புளுமெண்டால் வீதியில் உள்ள இவ் வர்த்தகரின் நிறுவனம், களஞ்சியசாலை ஆகியவை பொலிசாரால் சீல் வைக்கப்பட்டுள்ளது. இங்கு பணிபுரிந்த பல ஊழியர்கள் விசாரணைக்காக குற்றத்தடுப்பு பணியக அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்'

ருகுணு கப்பலில் ஏனைய உரவகைகள் மத்தியில் 10மெ. தொன் யூரியாவை வைத்து அனுப்ப இந்தவர்த்தகர் திட்டமிட்டிருந்ததாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. இவ் வர்த்தகர் முன்னரும் வட பகுதிக்கு தடைசெய்யப்பட்ட பொருள்களை அனுப்பியதற்காக விசாரிக்கப்பட்டவர் என பொலிசார் கூறியதாகஅவ்வானொலி மேலும் தெரிவித்தது.

## கப்பலில் அனுப்பும் பொருள் சிபார்சு செய்ய குழு

### ஜெரி டி சில்வா தலைமையில் நியமனம்

வடபகுதிக்கு கப்பலில் எடுத்து செல்லப்படும் சகலவித மான பொருள்கள் தொடர்பாகவும் நடைமுறைப்படுத்தல்களை ஒருமுகப்படுத்துவதை ஆராய்ந்து சிபார்சு செய்யவும் இராணுவக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது

இராணுவ பிரதான அலுவலர் மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா தலைமையிலான உயர் மட்ட குழு வொன்று பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவால் நியமிக்கப்பட்டுள்ளது.

## உலகஆசிரியர் தினம்குறித்து கலந்துரையாடல்கள்

உலக ஆசிரியர் தினத்தை சிறப்பாகப் பாடசாலைகளில் கொண்டாடுமுகமாக பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்களையும் பழைய மாணவர் சங்கத் தலைவர்களை செயலாளர்களையும். பாடசாலைகளின் மாணவர் தலைவர்களையும் பின்வரும் கல்விக் கோட்ட அடிப்படையில் தவறாது கலந்துரையாடலில் கலந்து கொள்ளும்படி தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவைச் செயலாளர் வேண்டியுள்ளார்.

1 தென்மராட்சிக் கல்விக் கோட்டம் இன்று புதன் கிழமை பி. ப. 3 00 மணிக்கு யா / றிபேக் கல்லூரி மண்டபம்.

2 யாழ். வேலணைக் கல்விக் கோட்டம். நாளை வியாழக் கிழமை பி. ப. 3.00 மணிக்கு யா / இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபம்.

3 வடமராட்சிக் கல்விக் கோட்டம் 24-ம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 3. 00 மணிக்கு வேலாயுதம் ம. வித்தியாலயம்.

4 பண்டத்தரிப்பு. மருதனாமடக் கல்விக்கோட்டம்- 25-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 00 மணிக்கு முறையே யா / மானிப்பாய் இந்துக் கல்லூரி யா/ இராமநாதன் கல்லூரி மண்டபம்.

தியாகி திலீபன

அடையாள உண்ணா விரதம் நடைபெற்றது. இந்நிகழ்வுகள் கடற்புலிகளின் குருநகர் பிரதேசப் பொறுப்பாளர் திரு. சதீஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

தியாகி திலீபனின் ஆறாம் ஆண்டு உண்ணா நோன்பை யடுத்து விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் வடமராட்சிக் கோட்டத்தினரால் தயாரிக்கப்பட்ட 'நிகழ்வுகள்' என்னும் வீதி நாடகம் வடமராட்சிக் கோட்டத்தில் நடைபெற்று வருகிறது.

வடமராட்சி சிற்றூர்திச் சேவைச் சங்கத்தினர் தியாகி திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவுநாளையடுத்து திலீபனின் உருவப்படம் வைத்து தேர் ஊர்தி பவனி ஒன்றை வீதியில் எடுத்து சென்றனர்

நெல்லியடிச் சந்தியில்நேற்று காலை ஆரம்பமான இவ் ஊர்தி புறாப்பொறுக்கி, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, வதிரி, மானாண்டி பருத்தித்துறை சென்று நெல்லியடியை

மட்டு.

பட்டுள்ளது. அதிரடிப் படையினர் தற்போது காத்தான்குடியிலிருந்து தென் மட்டக்களப்பு வரை நிறுத்தப்பட்டுள்ளனர்.

அடுத்த வருடம் நவம்பர்

# தியாகி திலீபனின்

## 6-ம் ஆண்டு நினைவு நாள்

இடம் : வட்டு. திருஞானசம்பந்த வித்தியாசாலை
(ஆரம்ப பிரிவு மண்டபம்)

காலம் : 22 09 1993 புதன் (இன்று) பி.ப. 3 00 மணி

### நிகழ்ச்சிகள்

1. ஈகைச்சுடர் ஏற்றுகல்
2 தேசியக் கொடி ஏற்றல்
3 மௌன அஞ்சலி
4. தமிழ்த்தாய் வணக்கம்
5. நினைவு நாள் உரை
(விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள்)
6. கலை நிகழ்ச்சிகள்
7. பட்டி மண்டபம்

"தமிழீழம் மீதான பிரதான ஆக்கிரமிப்பாளர் இந்தியாவா? இலங்கையா?"

யாழ். நகரின் பிரபல பட்டிமண்டபப் பேச்சாளர்கள் கலந்து கொள்கின்றனர்.

நடுவர்: அ. குமாரவேல்

| இந்தியா | இலங்கை |
|---|---|
| திரு. எஸ், வரதராஜன் | திரு. ஆர். செல்வவடிவேல் |
| திரு. எஸ். வேலாயுதம் | திரு எஸ் மணிமாறன் |
| திரு. எஸ். கணேஸ் | திரு. கே எஸ். முத்துலிங்கம் |

இந்நிகழ்வில் தமிழீழ மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அமைப்புக் குழு

கல்லூரி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

காட்சி மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி வீரமுத்து சோதிமணி

பிறப்பு 1953-04-02

மறைவு 1992-09-19

திதி: 22-09-93

எங்கள் குடும்பத்தின் காவல் தெய்வமாய் இருந்தவரே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து இறைவனடி சேர்ந்து இன்றுடன் ஆண்டு ஒன்று பூர்த்தியாகி விட்ட போதிலும் உங்கள் பிரிவுத்துயர் தாங்க முடியாமல் இன்னும் எங்கள் நெஞ்சங்கள் நெருப்பாய் எரிந்து கொண்டிருக்கின்றன.

உங்கள் துயரம் தாங்காத குடும்பத்தினர்

15, கன்னாதிட்டி லேன்,
யாழ்ப்பாணம்.

(6073)

# மரண அறிவித்தல்

## திருமதி சிவகாமியம்மா இராசதுரை

நவாலி வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்தவரும் தற்போது பிரேமச்சந்திரன் வீதி, (இராசகாரியர் வீதி) மானிப்பாய் வடக்கில் வசிப்பவருமாகிய திருமதி சிவகாமியம்மா இராசதுரை நேற்று முன்தினம் (20. 09 93இல்) காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா, பொன்னம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும், திரு. இராசதுரையின் (இளைப்பாறிய லிகிதர், காணி அபிவிருத்தித் திணைக்களம்) அன்பு மனைவியும், திரு ஹரிகரன் (கொழும்பு), திரு. கருணாகரன் (ராஜன்), திரு. ரஞ்சன், திரு. இந்திரன் ஆகியோரின் அன்புத்தாயாரும், திருமதி சுமதினி, திருமதி ஞானரூபி ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்வி வளர்மதியின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 23-09-93 வியாழன் பிற்பகல் 3 00 மணியளவில் பிரேமச்சந்திரன் வீதி (இராசகாரியர் வீதி)யில் உள்ள இல்லத்தில நடைபெற்று பிப்பிலி மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

பிரேமச்சந்திரன் வீதி,
மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய்.

தகவல்;
ராஜன்

(6068)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் மணிமனையில் 1993-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

வதின்போது உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிய வருகிறது. (41)

## வடக்கில்

உறுப்பினர்கள் தெரிவித்தனர்,

இதற்குப் பதிலளித்துப் பேசிய சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க, வடக்கில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள இராணுவத்தினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இக்கூட்டத்தின் பின்னர் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க பல சிரேஷ்ட அமைச்சர்களையும் சந்தித்து தனித்தனியே பேச்சுக்களை நடாத்தியதாகவும் தெரியவருகிறது.

## யாழ்

கிறது. அத்துடன் கடைகளில் கடமைபுரிபவர்களின் சுகாதாரம் பேணப்படாததோடு, தின்பண்டங்கள் மூடிவைக்கப்படவில்லை என்றும் மலசல கூடவசதிகள் உரிய முறையில் பேணப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சுகாதார வைத்திய அதிகாரியினால் நடவடிக்கை எடுக்கப்பட்ட கடைகளில் ஐஸ்கிறீம் கடையும் ஒன்று என அதே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை நேற்றுப் பிற்பகல் பெருமாள் கோவிலுக்கு முன்னால் இனிப்புத்தின்பண்டங்களைமூடாமல் சுகாதாரக் கேடாகவிற்ற வியாபாரிகளை சுகாதார பரிசோதகர்கள் அவ்விடத்தை விட்டு அகற்றினர்.

## தியாகி

பணிமனை, தமாற்கந்தோர், பிரதேச சபை, புலோப்பளை சிற்றூர், தர்மக்கேணி அ.த.க. பாடசாலை; கொடிகாமம் வட்டம், புகையிரத நிலைய அருகாமை, கலைமகள் ச. ச. நி, பாலாவி சரஸ்வதி ச. ச. நி, கரம்பைக் குறிஞ்சி அரச த.க. பாடசாலை, கச்சாய் அ. த. க. பாடசாலை; சாவகச்சேரி வட்டம் மணக்குணாப் பிள்ளையார்கோவில் முன்னாக, சங்கத்தானை, சரசாலை தெற்கு, நுணாவில், கைதடி, பேக்கரி உரிமையாளர் சங்கம் மீசாலை மேற்கு. மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தி., கைதடி வட்டம், கைதடிச் சந்திக்கு அருகாமையில், கைதடி வடக்கு சிற்றூர் வளர்மதி ச. ச. நி, கைதடி தென் கிழக்கு ச. ச. நிலையம்; தீவகக் கோட்டம், நல்லூர் கந்தசாமி கோவில் வீதி, செம்மாதெரு, மண்டைதீவு, கொத்தணி, கொட்டடி.

## கலந்துகொள்ளும் பாடசாலைகள்

மண்டைதீவு ம வி. அல்லைப்பிட்டி றோ. க. த. க., வேலணை லாக்கண்டி மகாலஷ்மி வித்தி., கைதடி கலைவாணி வித்தி.,

மட்டுவில் வடக்கு சந்திர மௌலீச வித்தி., சாவகச்சேரி றோ. க. த. க. பாடசாலை., சரசாலை அ. த. க. பாடசாலை., சி. சி. த. க. பாடசாலை எழுதுமட்டுவாள்., கரம்பைக்குறிச்சி அ.த.க.பா., கச்சாய் அ.த.க. பாடசாலை., தர்மக்கேணி அ. த. க. பாடசாலை, வடஇந்து மகளிர் கல்லூரி, கரணவாய் ம..வி, சரஸ்வதி மகளிர் வித்தி., வல்லை றோ. க. த. க பாடசாலை, சென்தோமஸ் பெண்கள், கொக்குவில் இந்துக் கல்லூரி, நல்லூர் தெற்கு சிறிவிக்கினேஸ், புனித ஜேம்ஸ் ம.வி., புனித ஜோன்பொஸ்கோ., ஆனைப்பந்தி குருநாத வித்தி., பாஷையூர் அந்தோனியார். கொழும்புத்துறை இ. ம. வி., புனிதறோக் வித்தி., கொழும்புத்துறை துரையப்பா வித்தி., கொழும்புத்துறை புனித ஜேசப் வித்தி., சங்கானைல் தான அ. மி. த. க. பா., பிலவத்தை அ. மி. த. க. பாடசாலை., பாலாவோடை இ. க. பா., பெரியவிளான் றோ. க. த. க., மல்லாகம் விசாலாட்சிவித்தி., றோ கபாடசாலை, வறுத்தலைவிளான் அ. மி. த. பாடசாலை., காங்

தியாகி திலீபனின் ஆறாம் ஆண்டு உண்ணா நோன்பை யடுத்து விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் வடமராட்சிக் கோட்டத்தினரால் தயாரிக்கப்பட்ட 'நிகழ்வுகள்' என்னும் வீதி நாடகம் வடமராட்சிக் கோட்டத்தில் நடைபெற்று வருகிறது.

வடமராட்சி சிற்றூர் திச்சேவைச் சங்கத்தினர் தியாகி திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவுநாளையடுத்து திலீபனின் உருவப்படம் வைத்துதேர் ஊர்தி பவனி ஒன்றை வீதியில் எடுத்து சென்றனர்.

நெல்லியடிச் சந்தியில்நேற்று காலை ஆரம்பமான இவ் ஊர்தி புறாப்பொறுக்கி, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, வதிரி, மாலாண்டி பருத்தித்துறை சென்று நெல்லியடியை மாலை வந்தடைந்தது.

இவ் ஊர்தி ஊர்வலத்தின் போது அவரது வாழ்க்கை வரலாறு பாட்டாக எடுத்துரைக்கப்பட்டது அதேநேரம்காவடி நடனமும் இடம்பெற்றது.

இவ் ஊர்தி ஊர்வலத்தின் போது வீதிகள் தோறும் மக்கள் பூரணகும்பம் வைத்து அணையாத தீபம் ஏற்றி மலரும் மலர் மாலையும் அணிவித்தனர்.

தியாகச்செம்மல் லெப். கேணல் திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவாக தொடர்ச்சியாக 96மணித்தியாலங்கள் (நான்கு நாட்கள்) உண்ணாவிரதத்தில் குருநகர் தொடர்மாடியைச் சேர்ந்த ஆறு இளைஞர்கள் ஆரம்பித்துள்ளனர்.

யா / இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபம்.

3 வடமராட்சிக் கல்விக் கோட்டம் 24-ம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 3. 00 மணிக்கு வேலாயுதம் ம. வித்தியாலயம்.

4 பண்டத்தரிப்பு. மருதனாமடக் கல்விக்கோட்டம்- 25-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 00 மணிக்கு முறையே யா / மானிப்பாய் இந்துக் கல்லூரி யா / இராமநாதன் கல்லூரி மண்டபம்.

## மட்டு.

பட்டுள்ளது. அதிரடிப் படையினர் தற்போது காத்தான்குடியிலிருந்து தேன் மட்டக்களப்பு வரை நிறுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் நவம்பர் மாதத்திலும் விசேட அதிரடிப் படையினர் மண்டூர், சென்றல் காம்ப், குமாரங்கம, 16ஆம், 14ஆம், 13ஆம், 10ஆம் கொலனிகள் ஆகிய பகுதிகளில் விசேட அதிரடிப்படை பிரிவுகள் நிறுத்தப்பட்டமை தெரிந்ததே.

மேற்படி தொடர்மாடி மைதானத்தில் நேற்று மாலை 6 மணிக்கு ஆரம்பமான உண்ணாவிரதம் எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு முடிவடையும்.

நேற்று குருநகர் பகுதியில் ஒரு நாள் உண்ணா நோன்பு அனுட்டிக்கப்பட்டது. (லோ), (24), (21), (36)

கேசன்துறை றோ. க. வித்தி. அச்சுவேலிமகாவித்தியாலயம், உரும்பராய் சைவத்தமிழ், ஊரெழு கணேசா., ஊரெழு சி.சி.த.க., உரும்பராய் றோ. க. த, உரும்பராய் சந்திரோதயா., நவாலிதெற்கு அ.த.க. வட்டாரீதியில் தியாகி திலீபன் நினைவாக நாளை நடைபெறவுள்ள சிரமதானப்பணிகளின் விபரம் வருமாறு:- கோப்பாய் வட்டம், சிறுப்பிட்டி மணிமொழி முகாம் துப்புரவு, உடுவில் / தல்விப்பழை வட்டம் அளவெட்டி தும்புத் தொழிற்சாலை, முகாம் துப்புரவு செய்தல், நல்லூர் வட்டம் அரியாலை மயானம் துப்புரவு செய்தல்; கரவெட்டி வட்டம் அல்வாய் கிழக்கு ஆலங்கட் பொதுமயானம் திருத்தம்

பாரதி தாசன் ச. ச. நி. உறுப்பினர், உடுப்பிட்டி வட்டம் நெல்லியடி யாழ் வீதி, நாவலமடம் புறாப்பொறுக்கி ஆலடி வீதி துப்புரவு இமையாணன் அறிவாலயம் மூத்த விநாயகர் சச நி உறுப்பினர்பாடசாலை மாணவர்; பருத்தித்துறை வட்டம் பிரதான வீதி, மாவீரர் நினைவு தூபிகள்துப்புரவு; தீவகக் கோட்டம் லவனிதா குடியிருப்பு, சந்தை அமைத்தல்

7. பட்டி மண்டபம்

"தமிழீழம் மீதான பிரதான ஆக்கிரமிப்பாளர் இந்தியாவா? இலங்கையா?"

யாழ். நகரின் பிரபல பட்டிமண்டபப் பேச்சாளர்கள் கலந்து கொள்கின்றனர்.

நடுவர்: அ. குமாரவேல்

| இந்தியா | இலங்கை |
| --- | --- |
| திரு. எஸ், வரதராஜன் | திரு. ஆர். செல்வவடிவேல் |
| திரு. எஸ். வேலாயுதம் | திரு எஸ் மணிமாறன் |
| திரு. எஸ். கணேஸ் | திரு. கே எஸ். முத்துலிங்கம் |

இந்நிகழ்வில் தமிழீழ மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அமைப்புக் குழு
வட்டுக்கோட்டை

(6069)

யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

VON RYAN'S EXPRESS

இத்துடன் 'இதயபூமி 1' [மண்கிண்டிமலை இராணுவமுகாம் தகர்ப்பு] ஒளிவீச்சு காண்பிக்கப்படுகிறது

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி

சனி, ஞாயிறு தினங்களில்

காலை 10.30 மணி,

மாலை 4.00 மணி, 6. 00மணி (சி-7352)

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 21-09-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11005

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

41-8096, 27-9492, 24-8858, 24-7340, 26-1690
28-3735, 27-4301, 27-5449, 26-5244, 28-3233
24-6944, 26-4610, 24-4457, 26-4896, 26-2786
41-6933, 26-8051, 26-3633, 26-2125, 24-9390.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

41-6686, 27-2016, 24-7078, 26-5178, 42-6157
27-6493, 26-4885.